**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவியல் நடைமுறை சட்டம் 154 இன் கீழ்)~~

u/s 173 BNSS

C 8213038

1. District : மாவட்டம் திருவாரூர்  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு  Year: ஆண்டு 2025  FIR No.: மு.த.அ. எண் 01/AC/2025  Date: நாள் 23.01.2025

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988  Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: திருத்தப்பட்ட சட்டம் 2018  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 21.01.2025  Date to : நாள் வரை 22.01.2025

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 11.40 மணி  Time to : நேரம் வரை 11.25 மணி

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.01.2025  Time நேரம் : 06.15 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I  Time நேரம் : 0700 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ கிழக்கே

   Beat Number : முறைக் காவல் எண் —

   (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், பாகூர், திருவாரூர் மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. நடராஜன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பூவன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி 4/12 A, காந்தி நகர், திருமாபுரம் போஸ்ட், காவேரிப்பட்டினம், திருவாரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. குமரன், சர்வேயர், பாகூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

8. Reasons for delay In reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித் தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/1/25

23/01/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.01.2025 at 09.20 hrs

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.பொ.க. பிரிவு,
திருத்தணி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 23.01.2025 ஆம் தேதி காலை 06.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்த போது கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம், திம்மாபுரம் போஸ்ட், காந்திநகரை சேர்ந்த பூவன் மகன் திரு.P.நாகராஜன் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் P.நாகராஜன், த/பெ பூவன், கதவுஎண் 4/12-A, காந்திநகர், திம்மாபுரம் போஸ்ட், காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம். அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் சுமார் 10 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊரான பர்கூர் அருகில் உள்ள வெங்கடாபுரம் கிராமத்தில் விவசாயம் செய்துகொண்டும், தேங்காய் வியாபாரம் செய்தும் வருகிறேன். எனக்கு திருமணமாகி சங்கீதா என்ற மனைவியும், ஹரிஹரன் என்ற மகனும் உள்ளனர். எனது மகன் ஹரிஹரன் பாளையங்கோட்டையில் உள்ள சித்தா மருத்துவ கல்லூரியில் சித்தா பார்மஸி படித்துவிட்டு வீட்டில் உள்ளார். எனது மனைவி சங்கீதா பெயரில் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், மல்லப்பாடி கிராமத்திற்கு உட்பட்ட 736/8A1 மற்றும் 736/8A1A ஆகிய புதிய உட்பிரிவு புல எண்களில் எங்களுக்கு சொந்தமாக 7 சென்ட் காலி இடம் உள்ளது. அந்த காலிஇடத்தை எனது மகன், ஹரிஹரன் பெயரில் கடந்த 19.12.2024-ஆம் தேதி பர்கூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான செட்டில்மெண்ட் மூலம் ஆவணம் பதிவு செய்து வைத்தோம். அந்த ஆவணத்தில் உள்ள இடத்திற்கு சப்டிவிசன் செய்து பட்டா பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக 20.01.2025 ஆம் தேதி பர்கூர் சர்வேயர் குமரன் என்பவர் அவரது மொபைல் எண் 6382613346-லிருந்து எனது மகன் ஹரிஹரனின் மொபைல் எண் 8807562063க்கு போன் செய்தார். அப்போது எனது மகன் ஹரிஹரன் சர்வேயர் குமரனிடம் அப்பாவை பேசச்சொல்கிறேன் என்று சொல்லியுள்ளார். நான் வேறு வேலையாக இருந்ததால் அன்று அவரிடம் பேச முடியவில்லை. அதனால் 21.01.2025-ஆம் தேதி காலை சுமார் 11.40 மணிக்கு எனது மொபைல் எண் 8428511660 என்ற எண்ணிலிருந்து சர்வேயர் குமரனுடைய மொபைல் எண் 6382613346 என்ற

எண்ணிற்கு பேசினேன். அப்போது சர்வேயர் குமரன் என்னிடம் உங்களது காலி இடத்திற்கு இரண்டு சர்வே எண்கள் வருவதால் அந்த இடத்தை அளந்து பட்டா மாறுதல் உட்பிரிவு செய்து கொடுக்க கொஞ்சம் பணம் செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் எவ்வளவு செலவாகும் சார் என்று கேட்டேன். அதற்கு சர்வேயர் குமரன், உங்களது நிலம் இரண்டு சர்வே எண்களில் வருவதால் அதற்கு 10,000/- ரூபாய் செலவாகும் என்று சொன்னார். இப்போது அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன் அதற்கு சர்வேயர் நாளை தன்னிடம் இது பற்றி போனில் பேசுமாறு சொன்னார் நானும் சரி என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். அதன் பிறகு 22.01.2025 ஆம் தேதி காலை சுமார் 11.25 மணிக்கு நான் சர்வேயர் அவர்களை எனது போன் மூலம் தொடர்பு கொண்டு பேசினேன். அதற்கு அவர் தான் வண்டியில் சென்று கொண்டிருப்பதாகவும், வண்டியை நிறுத்திவிட்டு கூப்பிடுவதாகவும் சொன்னார். சிறிது நேரம் கழித்து சர்வேயர் குமரன் அவரே என்னை போனில் கூப்பிட்டு சப்டிவிசன் செய்வதற்கு தான் கேட்ட பணம் பற்றி கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும், அந்த பணத்தில் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டபோது, அப்படின்னா அதில் 1,000/-ரூபாய் குறைச்சிட்டு, 9,000/-ரூபாய் கொடுத்தால் வேலையை முடித்து தருவதாகவும், அதற்கு குறைவாக செய்ய முடியாது என்றும் சொன்னார். பணத்தை கொடுத்தால் சீக்கிரம் வேலையை முடித்து தர ஏற்பாடு செய்கிறேன் என்றும், அதனால் தான் கேட்ட பணத்துடன் தன்னை எப்போது வேண்டுமானாலும் வந்து பார்க்குமாறும் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். பர்கூர் சர்வேயர் குமரன் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.9,000/- கொடுத்து எனது மகன் ஹரிஹரன் பெயரில் சப்டிவிசன் செய்து பட்டா மாற்றம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அதனால அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.9,000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட பர்கூர் சர்வேயர் குமரன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) P.நாகராஜன் 23.01.2025.

Sir, received a computer typed complaint on 23.01.2025 at 06.15 hrs and a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is

genuine. Therefore, a case in Krishnagiri V&AC, Cr.No.1/AC/2025, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by PC amendment Act 2018 was registered today 23.01.2025 at 07.00 hrs against the accused Tr.Kumaran, Surveyor, Bargur, Krishnagiri District. The original FIR along with complaint is sent to the Hon'ble court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and copies are sent to the officers concerned.

Inspector of Police,
Vigilance and Anti-Corruption
Krishnagiri.